Scanned by CamScanner



எய்ட்ஸ் கிருமி

படத்தில் இருப்பது என்னவென்று தெரிகிறதா? இன்று உலகையே ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் எய்ட்ஸ் கிருமியின் உட்புறத் தோற்றம்தான், இது. ரஷிய விஞ்ஞான ஆராய்ச்சி நிபுணர்கள் இந்தப் படத்தை உருவாக்கியுள்ளார்கள்.

கொலைகாரப் பறவை

படத்தில் காணப்படும் சிரிக்ஸ் என்ற பறவை, மிகவும் கொடூரமான குணத்தைக கொண்டது. இது மரத்தில் வாழும். இது, தனக்குத் தேவையான உணவுகளை (பூச்சிகள், வண்டுகள், பல்லிகள்) பிடித்து உடனே உண்ணுவதில்லை.

மரத்தில் உள்ள கூர்மையான குச்சிகளில் குத்தி வைத்து விட்டு, தேவைப்படும் பொழுது எடுத்து சாப்பிடுகிறது. அதனால் இதை கொலைகாரப் பறவை என்று அழைக்கிறார்கள்.

Scanned by CamScanner

ராணி காமிக்ஸ்-126
(மாதம் இருமுறை இதழ்)

செப்டம்பர் 16-30
1989



Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner



ஷூ வடிவ கார்

ஜோன்கால் என்பவர் (வயது 28) லாஸ்ஏஞ்சல் நகரில் (அமெரிக்கா) செருப்பு தைக்கும் கடை ஒன்றை நடத்தி வருகிறார். இவர் தனது தொழில் விளம்பரத்துக்காக, 'ஷூ' வடிவில் ஒரு கார் உருவாக்கி, அதை தனது கடை முன்பு நிறுத்தி வைத்திருக்கிறார். வெளியில் செல்வதற்கும், இந்தக் காரையே பயன்படுத்துகிறார்.

முற்றுப் புள்ளி!

எழுதும்போது, ஒரு வாக்கியம் முடிந்தவுடன் முற்றுப் புள்ளி வைக்கிறோம் அல்லவா? அந்த முற்றுப்புள்ளியை கண்டுபிடித்தவர் யார் தெரியுமா?

ஆல்டஸ் மனுசியஸ் என்பவர்தான் முற்றுப்புள்ளி முறையை அறிமுகப்படுத்தினார். இவர் ஓர் அச்சகத் தொழிலாளி.

சென்ற ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது, ஒவ்வொரு வேட்பாளரும் செலவிட்ட தொகை எவ்வளவு தெரியுமா? ரூ. 150 கோடி!

ஆசியாக் கண்டத்தில் கார் உற்பத்தியில், இந்தியா இரண்டாவது இடத்தில் இருக்கிறது!

Scanned by CamScanner

பக்ஜோன்சு
தோன்றும்

பாலத்துக்கு அடியில்

Scanned by CamScanner

அமெரிக்காவில் பல நகரங்களில் தொடர்ந்து பாங்கி கொள்ளை நடந்து வந்தது. ஆல்காலி நகரிலும் மக்கள் பீதியுடன் இருந்தார்கள். பாங்கியை சுற்றி பலத்த பாது காப்பு போடப்பட்டது. ஆல்காலி நகர செரீப் பக்ஜோன்சு மிகவும் எச்சரிக்கையுடன் இருந்தார். ஒருநாள் பக், வெளியூர் சென்று இருந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு இரண்டு கொள்ளையர்கள் பாங்கியைக் கொள்ளையடிக்க வந்தார்கள். பாங்கியை சுற்றியிருந்த காவலர்களுக்கும், கொள்ளையர்களுக்கும் பலத்த துப்பாக்கி சண்டை நடந்தது.

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner



Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner





Scanned by CamScanner



Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner



Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner



கனடா நாட்டுக் குதிரைப் படை வீரர்களின் அணிவகுப்பைத் தான் படத்தில் பார்க்கிறீர்கள்.

கனடாவில், வீரர்கள் வட்டமாக நின்றுதான் உறுதிமொழி எடுக்கிறார்கள். இந்தக் காட்சி, அந்நாட்டு ரூபாய் நோட்டுகளில் இடம்பெற்றுள்ளன.

மேலே காணப்படுவது 19-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கனடா வெளியிட்ட ரூபாய் நோட்டு!

வெள்ளை மான்!

ஐரோப்பாவில் ஆல்பின் காட்டுப் பகுதியில் வெள்ளை நிற மான்கள் ஏராளமாக காணப்படுகின்றன. இந்த மானை கொன்றவர்களுக்கு ஓர் ஆண்டுக்குள் மரணம் ஏற்படும் என்று மக்கள் நம்புகிறார்கள். ஆனால், வேட்டைக்குச் செல்பவர்கள் இந்த வெள்ளை மான்களை கண்டால் ஒதுங்கிவிடுகிறார்கள்.

இந்தியாவிலே உயரமான டி.வி. கோபுரத்தை இராமேசுவரத்தில் அமைக்கப் போகிறார்கள்.

300 மீட்டர் உயரத்தில் இந்தக் கோபுரம் அமையப் போகிறது.

கைக்குட்டை (கர்ச்சீப்) முதன் முதலில் அறிமுகப்படுத்திய நாடு– பிரான்சுதான்!

Scanned by CamScanner

குதிரையின் தந்திரம்!



Scanned by CamScanner



Scanned by CamScanner



Scanned by CamScanner





Scanned by CamScanner

உலகப் புகழ்பெற்ற அழகி ஒருத்தி, அறிஞர் பெர்னார்ட் ஷாவை சந்தித்தாள். இருவரும் சிறிது பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது அந்த அழகி பெர்னார்ட் ஷாவிடம், “நான் உலகிலேயே சிறந்த அழகி என்பது உங்களுக்குத் தெரியும். அதுபோல நீங்களும் உலகிலேயே சிறந்த அறிஞர் என்று எனக்குத் தெரியும். நாம் இருவரும் திருமணம் செய்துகொண்டால் நமக்கு அழகிலும், அறிவிலும் சிறந்த குழந்தை பிறக்குமல்லவா” என்று கேட்டாள்.

பெர்னார்ட் ஷா சிறிதும் தயக்கமின்றி, “நீ சொல்வது சரிதான். ஆனால் பிறக்கும் குழந்தைக்கு என்னைப் போன்ற அழகும், உன்னைப் போன்று அறிவும் உடையதாக இருந்துவிட்டால், என்ன செய்வது” என்று திருப்பிக் கேட்டார்!

அவள் வாய்ப் பேசவில்லை!

—சரவண சக்திவேல்,
விழுப்புரம்.

சூடான் நாடு ஜனவரி 1-ந் தேதி சுதந்திரம் பெற்றது. பர்மா, ஜனவரி 4-ல் சுதந்திரம் அடைந்தது.

மாந்திரீகச் சக்கரம்

பி.டி.சாமி

முன்கதை சுருக்கம்:–

அம்மன் சக்தியைப் பற்றி கட்டுரை எழுதுவதற்காக, கேரளாவில் உள்ள புன்னம்புழா என்ற இடத்திற்குச் சென்ற அபிநயா, தன் தோழி நாராயணி, தலை துண்டிக்கப்பட்டு கொல்லப்பட்ட செய்தி கேட்டு அதிர்ந்தாள். அவள் கொழிஞ்சமூடு கிராமத்தில் ஒரு வீட்டில் தங்கியிருந்தாள். அபிநயாவை குருதி அம்மன் கோவிலுக்கு அழைத்துச் சென்றான், ஒரு கிழவன். கோவில் பூசாரி– ஆனைக் கண்ணன். அபிநயாவைக் காணாமல் இந்திரகாந்த் தவித்துக் கொண்டிருந்தான்.

அபிநயாவுக்கு இப்பொழுது மயக்கம் தெளிந்திருந்தது. கண்களைத் திறந்து விரித்த போது குத்துவிளக்குத் திரிகள் எரியும் வெளிச்சம் புகைமூட்டம் போல் மசமசப்பாய் தெரிந்து...

எதிரில் ஓர் உருவம் தென்பட்டது.

இந்த உருவம் யார்?

இவள் பதட்டமாய் எழுந்திருக்க முயன்றபோது அந்த உருவம் கைநீட்டித் தடுத்தது. "பேடிக் கேண்டே... நான்தான் அச்சன் ஆனைக் கண்ணன்..."

கண்களைப் பீதியுடன் துடைத்துக்கொண்டு தலையை உயர்த்தி அபிநயா பார்த்தாள்.

இடுப்பில் செவ்வாடை கட்டிக்கொண்டு முறுக்கிய மீசையுடனும் கன்னங்கரேலென்ற தாடியுடனும் அச்சன் ஆனைக் கண்ணன் தெரிந்தான்.

எதிரில் புலித்தோல் விரித்து அதன் மீது சம்பளம் போட்டு யோகாசனம் செய்வது போல் உயர்ந்து– நிமிர்ந்து கம்பீரமாக உட்கார்ந்திருந்தான்.

கெட்டியான உடம்பு. விரிந்த மார்பில் முழுமையான ஆரோக்கியம்.

வயிறு தொய்யாமலும், தொப்பை போடாமலும் கச்சிதமாக அமைந்திருந்தது.

அபிநயா குழப்பமடைந்தவளாய்ச் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

சுற்றிலும் பழைய தூண்கள். சரியாகப் பராமரிக்கப்படாத

Scanned by CamScanner

புழுக்கமான ஈர மண்வாசனை...

இது பள்ளிமாடம் என்பது விரிக்கப்பட்டிருந்த கோரைப் பாயிலிருந்தும் தலைக்குக் கொடுத்திருந்த தலையணையிலிருந்தும் தெரிந்தது.

ஓரிடத்தில்-

நிறைய பூஜை சாமான்கள்! மாந்திரீகத்திற்குப் பயன்படுத்தும் உபகரணங்கள்!

இவள் மலர மலர விழிக்கவே அவன் பதில் சொல்ல முன்வந்தான்- "மோளே... இந்த வீடு குருதி அம்மன் கோயில் பின்னால் இருக்கும் என்னோட பள்ளிமாடம். இங்கே நான் மட்டுமே தியானம் செய்துகொண்டும் சயனித்துக் கொண்டும் இருக்கிறேன். இங்கே பெண்குட்டிகள் யாருக்கும் அனுமதி இல்லா..."

பெண்கள் யாருக்கும் இங்கே தங்க அனுமதி இல்லையாம்!

அப்படியானால் தன்னை மட்டும் ஏன்?

கேட்டாள். "பின்னே நான் இங்கே எப்படி?"

"உன் மேல குருதி அம்மனுக்கு ரொம்பவும் விருப்பம். உன்னோட இரத்தம் இரத்த அபிஷேகம் செய்யத் தேவைப் படுது. இரத்த அபிஷேகம்னா, பாட்டில் கணக்கில் அல்ல; ஒரு ஐந்து சொட்டு போதும்."

அவன் சொல்ல-

இவள் உடம்புச் சிலிர்த்தது.

உண்மையாகவே நான் ஆபத்தில் சிக்கிக்கொண்டேன். ஆபத்து எத்தகையது என்பது எனக்குப் புரிகிறது. ஆனால், அந்த ஆபத்திலிருந்து எப்படித் தப்பித்துச் செல்வது என்ற வழி எனக்குத் தெரியவில்லை. கரை சேரத் தெரியாமல் இருண்ட பாலைவனத்தில் நிற்பது போல் தடுமாறுகிறேன்.

இவளுக்கு கழுத்துப்பரப்பிலும் நெற்றியிலும் வியர்த்தது.

இரவில் நடந்த நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்த்தாள்.

விழித்துக்கொண்டே தூங்குவது போன்ற நிலை! அப்பொழுது கனவாகச் சிந்தனைகள் விரிந்தன.

ஜடாமுடிக் கிழவி பேச்சியம்மாவின் மந்திரமுறி-

அங்கே நீளமாய் விழுந்து வணங்கி எழுந்து விபூதிப் பொடியை வாயினுள் வாங்கிக் கொண்டது. வெண்மையான அந்தப் பொடி நாக்கில் பட்டுக் கரைந்ததும் திடீரென்று உடம்பு பூராவும் சிலிர்த்தது. விபரீதமான உணர்வுகள் மூளைப் பிரதேசத்தைப் சலனப் படுத்தியது...

தன்னையும் மறந்துவிட்ட நிலையில், ஆவேசக்காரியான குருதி அம்மன் சந்நிதானம் சென்றபோது பூசாரி அச்சன் ஆனைக் கண்ணனை தரிசித்தது...

ஆனைக் கண்ணன் மந்திர உச்சாடனம் செய்தது- அதைத் தொடர்ந்து மின்னல் ஒளி கண்களைத் தாக்கியது போல் தடுமாறிச் சரிந்தது...

அதன்பிறகு என்ன நடந்தது என்பதைத் தெரிந்துகொள்ளாமல் இப்பொழுது பூசாரியின் பள்ளிமாடத்தில் தூங்கிவிட்டு விழிப்புத் தட்டிய நிலையில் எழுந்திருப்பது-

Scanned by CamScanner

Scanned by CamScanner

இப்பொழுது காக்கைகளின் கூச்சலும் பறவை இனங்களின் காச் மூச் ஒலிகளும் பொழுது புலர்ந்துவிட்டது என்பதைச் சுட்டிக்காட்டின.

திடீரென்று இவள் மனதில் ஒரு சந்தேகப் புயல்.

இரவில் மயங்கிச் சரிந்த என்னை இங்கே எடுத்து வந்து பாயின் மீது படுக்க வைத்திருக்கிறார்கள். பூசாரி அச்சன் ஆனைக் கண்ணன் சாமியாராக இருந்தாலும் ஏகப்பட்ட மதம தப்புடன் தெரிகிறான்.

யோசிக்கையில்—

நெஞ்சுக்குள் ஒரு பயம்—

இரவில் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தபோது ஏதாவது தப்பு...?

உடம்பில் சருமம் புல்லரித்தது.

கவனித்தபோது—

எந்த மாற்றங்களும் தெரியவில்லை!

சேலையின் முனையை கொக்கி முடிச்சு போடுவது போல் இடுப்பில் சொருகியிருந்தாள். அந்த முடிச்சு அப்படியே இருந்தது. எந்தப் பகுதியிலும் விலகியிருக்கவில்லை. முடிச்சு அவிழ்க்கப்படவும் இல்லை.

பெண்மை சேதமடைந்ததற்கான எந்தவிதமான அறிகுறிகளும் தென்படவில்லை.

அதை உணர்ந்தபோது அப்பாடா என்று நிம்மதி மூச்சுவிட்டாள்.

அவன் எழுந்தான். எண்ணெய் நெடி அடிக்கும் அந்த அறையினுள்ளேயே சிறிது நடந்துவிட்டு மறுபடியும் வந்து புலித் தோலின் மீது உட்கார்ந்தான்.

பார்த்தான்.

இவள் வியர்த்துப் போயிருப்பது தெரிந்தது.

"மோளே..."

தலையைத் தூக்கினாள். மனம் தளர்வாய் உடல் பலஹீனமாய் இருந்தது. ஆபத்து என்று தெரிந்தும் ஓடிவிட வேண்டும் என்ற இயக்கம் கால்களுக்கு இல்லை.

பத்திரிகை நிருபர் என்பதும், இங்கே எந்த நோக்கத்துடன் வந்திருக்கிறோம் என்பதும் நினைவில் இருக்கிறது. ஆனால், அவற்றை எப்படிப் பூர்த்தி செய்வது என்ற சிந்தனை மந்தமாகிவிட்டது.

கொத்தடிமைதனப்புத்தி... அச்சன் ஆனைக் கண்ணன் என்ன சொன்னாலும் மறுப்பேதும் தெரிவிக்காமல் செயல்பட வேண்டும் என்ற எண்ணம். மனசு பூராவும் தன் வசமில்லை. அப்படியொரு குழப்பமான தத்தளிப்பு...

மீண்டும் சிந்தனை!

என்ன செய்வது என்று தோன்றாத தவிப்பு...

உணர்ச்சி நரம்புகளில் திடீரென்று ஒரு செயல் வேகம். இனியும் இங்கே தங்கியிருப்பது கற்புக்கும் உயிருக்கும் பாதுகாப்பானது அல்ல.

ஆனால், இங்கேயிருந்து எப்படிப் போவது என்று புரியவில்லையே.

"நான் இங்கேயிருந்து போகணும்" இவள் சொன்னாள்.

"போய்க்கோ. நான் உன்னோட சேலை முந்தானையைப் பிடிச்சிருக்கவில்லை."

இவளுக்கு இன்னும் வியர்வை விறிட்டது. கழுத்து நரம்புகள் புடைத்துக்கொண்டு பய இரத்தம் ஓடியது.

எப்படி...? எங்கே போவது என்று தெரியவில்லை. சிந்தித்து செயலைத் தூண்டும் முக்கிய நரம்புகள் முடமாகியிருக்கின்றன. "அச்சன்! எனக்குப் பயமாக இருக்கு."

இவள் பயத்தாலும் அதிர்ச்சியாலும் அழத் தொடங்கி விட்டாள்.

தன்னை மந்திரம் போட்டு ஏதோ செய்துவிட்டார்கள். அச்சன் ஆனைக்கண்ணன் மனது வைத்தால் மட்டுமே பழைய அபிநயாவாகத் திரும்பிச் செல்ல முடியும். இல்லாவிட்டால் ஆபத்து.

அவன் அவளை பல்லிளிப்புடன் பார்த்துவிட்டு, எண்ணெய் மினுமினுப்புக் கொண்ட நீக்ரோ கருப்பு முகத்தோடு சொன்னான். சந்தோசம் பேச்சில் அலையடித்தது.

"உன்னோட பேரு என்ன? அதாவது ஞாபகம் இருக்கா?"

"இருக்கு. அபிநயா..."

"மிஸ்சா? திருமதியா?"

கேள்வியோ, அவன் கேட்ட அகம்பாவ தோரணையோ சரியாக இல்லை. ஆனால், வலைக் கண்ணில் சிக்கிக்கொண்ட மான்குட்டியான தன்னால் என்ன செய்துவிட முடியும்?

கீழ் உதட்டை மடித்துக் கடித்து உள்ளக் குமுறல்களை அடக்கிக்கொண்டாள். கோயில் பூசாரிக்கு இதெல்லாம் தேவையில்லாதது. ஆனாலும் பதில் சொல்லாவிட்டால் அவனுடைய பகையை நேர்கொள்ள நேரிடும்.

இந்த ஆபத்தான சூழ்நிலையில் அவனை எதிரியாக மாற்றிக்கொள்வது புத்திசாலித்தனம் ஆகாது. இங்கே தன்னை முகமாற்றம் செய்திருக்கிறார்கள். அதிலிருந்து மிகவும் தந்திரமாக விடுபட வேண்டும்.

ஒருவேளை கண்ணீருக்கு அவன் இரங்கவும் கூடும்! பேயே இரங்குவதாக பழங்கதை உள்ளபோது அவன் மனிதன் தானே!

"மிஸ்தான்!"

"சந்தோசம். நீ அப்பா அம்மாவுக்குப் பிறந்த முதல் மகள் தானே?"

"ஆமா. ஒரே மகள்."

"உன்னைப் போலவுள்ள தலைச்சண் குழந்தைதான் என் தாய் குருதி அம்மனுக்கு பிடிக்கும். உன்னை அம்மன் வரித்து விட்டாள். இனி நீ கோயில் சொத்து. சுத்தமான உடம்புக்காரியான உன்னைத்தான் பாடைக்காரியான என் தாய் விரும்புவாள்."

அவன் பேசிய தோரணை...

மூச்சடைத்து, இதயம் நோக்கிச் செல்லும் ஜீவ நரம்புகளைச் சுண்டிச் சுண்டி இழுப்பது போல் இருந்தது.

இவள் தவிதவிக்க...

அவன் ஏகப்பட்ட சந்தோசத்துடன்– திமிர்பிடித்த மமதைச் செருக்குடன் பேச்சைத் தொடர ஆரம்பித்தான்.

"போன ஜென்மத்தில் நீ புண்ணியம் பண்ணியிருக்கணும். நான் சொல்லப்போவது உண்மையாகவே உனக்குக் கஷ்

டமாக இருக்கும். ஆனால், பிற்பாடு பெருமைப் பட்டுக்கொண்டே உயிரை விடுவாய்."

உயிரை...!

குப்பென்ற வியர்வை இவளுக்கு.

குருதி அம்மன் கோயிலில் இருந்துகொண்டு, இரக்கத்தை மறந்துகொண்டு எப்படியெல்லாம் பேசுகிறான்!

"பெண்ணே! இனி ஞான் சுற்றி வளைத்துக்கொண்டு பேசும் அவசியம் இல்லா. கவனிச்சுக்கோ. அம்மனுக்கு நான் உன்னைப் பிரதிஷ்டை செய்துவிட்டேன். இனி உன்னையே அம்மனுக்குத் தர்ணும் காணிக்கையாக!"

நாசித் துவாரங்கள் வழியாகச் சுவாசிக்க இவளுக்குத் தெரியவில்லை. காற்று குடிப்பது போல வாய்பிளந்தாள்.

"இங்கே தினசரி இராத்திரியில் நள்ளிரவு நேரத்தில் அம்மனுக்கு இரத்த பூஜை செய்வேன். அந்தப் பூஜைக்குத்தான் உன்னோட கன்னி ரத்தம் தேவைப்படுது. நாற்பத்தியொரு நாட்கள் இந்தப் பூஜை நடக்கும். பூஜையின் முடிவில் சர்வ சித்திகளும் நிறைவேறும் மாந்திரீகச் சக்கரம் தயாராகும். ஆனால், மோளே..."

சந்தோசச் சிரிப்பு முகத்துடன் சொன்னவன் முகம் மாறினான்!

இவள் திடுக்கிட்டுப் பார்க்க—

அவன் உமிழ்நீரை விழுங்கி விட்டுச் சொன்னான்— "அப்போது நீ உயிரோட இருக்க மாட்டே! உன்னோட உடம்பு துண்டு துண்டாக வெட்டி எடுக்கப்பட்டு குருதி அம்மனுக்கும் இங்கேயுள்ள வாதை, சூளி, ஓங்கார பிடாரிக்கும் படையல் போடப்பட்டிருக்கும்!"

(தொடரும்)

இந்தியாவில் முதன் முதலில் நிறுவப்பட்ட பல்கலைக் கழகம்—

மைசூர் பல்கலைக் கழகம் தான். 1916-ம் ஆண்டு நிறுவப்பட்டது.

1912-ல் தான், டெல்லி இந்தியாவின் தலைநகரமாக மாறியது. அதற்கு முன்பு, இந்தியாவின் தலைநகரமாக இருந்தது— கல்கத்தா.

ராணி சின்டிகேட் சார்பில் அச்சிட்டு, வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007. ஆசிரியர்: அ. மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.

Scanned by CamScanner

'கு'வில் தொடங்கும் பொருட்கள் இங்கே எத்தனை சிதறியுள்ளன? கண்டுபிடியுங்கள் பார்ப்போம்?



Scanned by CamScanner

...Regd. No. TN/MS(N)/461

அடுத்த காமிக்ஸ்

ராணி காமிக்ஸ்



கோட்டைக்குள் குத்துவெட்டு

முழு நீளப் படக் கதை

நொடிக்கு நொடி வெடிக்கும் துப்பாக்கிகள்!

அக்டோபர் 1-ந் தேதி வெளி வருகிறது.
உங்கள் பிரதிக்கு முந்துங்கள்

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007.

Scanned by CamScanner